# 19ஆம் நூற்றாண்டின் சமூக & சமய சீர்திருத்த இயக்கங்கள்

---

## 1. ஆங்கிலக் கல்வியின் தாக்கம்

- எழுத்தாளர்களை உருவாக்கும் நோக்கில் **ஆங்கிலக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.**
- இது ஒரு **புதிய ஆங்கிலக் கல்வி பெற்ற நடுத்தர வர்க்கத்தை** உருவாக்கியது.
- இந்த வர்க்கம்:
  - மேற்கத்திய சிந்தனைகள்
  - மேற்கத்திய கருத்துக்கள்
  - மேற்கத்திய தாக்கங்கள்

    ஆகியவற்றால் **அதிகமாக பாதிக்கப்பட்டது.**
- எண்ணிக்கையில் **சிறியது** என்றாலும்:
  - அரசியலில்
  - சீர்திருத்த இயக்கங்களில்

    **முக்கிய தலைமைப் பங்கு** வகித்தது.

---

## 2. சீர்திருத்தவாதிகளின் நோக்கம்

- சீர்திருத்தவாதிகள்:
  - தங்களுடைய **கருத்துக்களையும்**
  - இந்தியாவின் **பழைய பாரம்பரியங்களையும்**

    **ஆழமாக ஆய்வு செய்தனர்.**

- இந்தியப் பண்பாட்டையும்
  மேற்கத்திய பண்பாட்டையும்
  **ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.**

---

## 3. சமூக தீமைகளுக்கு எதிரான போராட்டம்

- அவர்களின் கருத்துகள் மற்றும் செயல்பாடுகள்:
  - உடன்கட்டை (சதி)
  - பெண் சிசுக்கொலை
  - குழந்தைத் திருமணம்
  - மூடநம்பிக்கைகள்
    போன்ற **சமூக தீமைகளை கட்டுப்படுத்த உதவின.**

---

## 4. சீர்திருத்த இயக்கங்களின் வகைப்பாடு

- **19**ஆம் நூற்றாண்டின் சீர்திருத்த இயக்கங்களை **இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்:**

### (A) சீர்திருத்த இயக்கங்கள்

- பிரம்ம சமாஜம்
- பிரார்த்தனை சமாஜம்
- அலிகார் இயக்கம்

### (B) மறுமலர்ச்சி / புதுமை எழுச்சி இயக்கங்கள்

- ஆரிய சமாஜம்
- இராமகிருஷ்ண மிஷன்

- தியோபந்த் இயக்கம்

---

## 5. ஒடுக்கப்பட்ட மக்களுக்கான சமூக போராட்டங்கள்

- ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக கட்டுப்பாடுகளை எதிர்த்து **பல முயற்சிகள் நடைபெற்றன.**

**முக்கிய சமூக சீர்திருத்தவாதிகள்**:

- **மகாராஷ்டிரா –** ஜோதிராவ் புலே
- **கேரளா –** நாராயண குரு
- **கேரளா –** அய்யங்காளி
- **தமிழ்நாடு –** இராமலிங்க அடிகள்
- **தமிழ்நாடு –** அயோத்திதாசர்

---

### இராஜா ராம்மோகன் ராய் (1772–1833) – சமூக & சமய சீர்திருத்தவாதி

---

- **இராஜா ராம்மோகன் ராய் ஆரம்பகால சமூக சீர்திருத்தவாதிகளில் முக்கியமானவர்.**
- **மேற்கத்திய கருத்துக்களால் ஈர்க்கப்பட்டவர்.**
- **சமூக சீர்திருத்தப் பணிகளை முன்னெடுத்தவர்.**
- **பெரும் அறிஞர்.**

---

## 2. மொழிப்புலமை

- தாய்மொழி – வங்காள மொழி
- தேர்ச்சி பெற்ற மொழிகள்:
    - சமஸ்கிருதம்
    - அரபி
    - பாரசீகம்
    - ஆங்கிலம்

---

## 3. சமூக சீர்திருத்தக் கொள்கைகள்

- எதிர்த்தவை:
    - பொருளற்ற சமயச் சடங்குகள்
    - சமூக தீமைகளை விளைவிக்கும் பழக்கங்கள்
- பாதுகாக்க விரும்பியது:
    - நல்ல மரபுகள்
- ஆதரித்த கருத்துகள்:
    - ஒரே கடவுள் கொள்கை
    - உருவ வழிபாடு எதிர்ப்பு

---

## 4. சமயக் கொள்கைகள்

- உபநிஷத்துகளின் விளக்கத்தின் அடிப்படையில்:
    - அனைத்து இந்து மறை நூல்களும்

- ஒரே கடவுள் கொள்கையை போதிக்கின்றன என்று கூறினார்.

---

### 5. சமூக தீமைகளுக்கு எதிரான போராட்டம்

- கடுமையாக எதிர்த்தவை:
  - உடன்கட்டை ஏறுதல் (சதி)
  - குழந்தைத் திருமணம்
  - பல்தார மணம்
- இந்தத் தீமைகளுக்கு எதிராக:
  - நூல்கள் வெளியிட்டார்
  - ஆங்கில அரசாங்கத்திடம் சட்டம் இயற்ற கோரிக்கை வைத்தார்

---

### 6. பெண்கள் உரிமைகள் & கல்வி

- வித்தவப் பெண்களுக்கு மறுமணம் செய்ய உரிமை உண்டு என்றார்.
- பல்தார மணத்தை முழுமையாக ஒழிக்க வேண்டும் என்றார்.
- பெண்களுக்கு:
  - கல்வி
  - சம உரிமை

  வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

- ஆண்கள் பெண்களை கீழானவர்களாக நடத்தும் நிலையை கடுமையாக எதிர்த்தார்.

---

### 7. மனிதநேயக் கொள்கைகள்

- மக்களிடம்:
    - பகுத்தறிவு
    - பரிவு
    - மனிதப் பண்பாடு
      இருக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

---

### 8. சதி ஒழிப்பு சட்டம் – 1829

- 1829ல்:
    - தலைமை ஆளுநர் வில்லியம் பெண்டிங்
    - 'சதி' முறையை ஒழிக்கும் சட்டம் இயற்றினார்.
- இதில் இராஜா ராம்மோகன் ராய் முக்கிய பங்கு வகித்தார்.

---

### 9. கல்விச் சீர்திருத்தம்

- ஆதரித்தது:
    - ஆங்கிலக் கல்வி
    - மேற்கத்திய அறிவியல்
- பள்ளிகள் & கல்லூரிகளில்:
    - ஆங்கிலக் கல்வி

- மேற்கத்திய அறிவியல் கற்பிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

---

## 10. பிரம்ம சமாஜம் – 1828

- நிறுவிய ஆண்டு: 1828
- நிறுவிய நாள்: ஆகஸ்ட் 20
- இடம்: கல்கத்தா (கோல்கத்தா)

பிரம்ம சமாஜத்தின் முக்கிய அம்சங்கள்:

- உருவ வழிபாடு இல்லை
- சிலைகள் இல்லை
- பொருளற்ற சடங்குகள் இல்லை
- எந்த மதத்தையும்:
  - இழிவுபடுத்தக் கூடாது
  - அவமதிக்கக் கூடாது

---

பிரம்ம சமாஜத்தின் சமூக தாக்கம்

- ஆரம்பத்தில்:
  - கல்வியறிவு பெற்ற
  - மேல் வர்க்க வங்காள மக்களிடையே மட்டுமே பரவியது
- அடித்தட்டு மக்களிடம்:

    - பெரிதாகச் சென்று சேரவில்லை
- இருந்தாலும்:
    - நவீன வங்காளப் பண்பாட்டிலும்
    - நடுத்தர வர்க்கத்திலும்
      மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது

### (ஆ) மகரிஷி தேவேந்திரநாத் தாகூர் (1817–1905)

**மகரிஷி தேவேந்திரநாத் தாகூர் – பிரம்ம சமாஜத் தலைவர்**

#### 1. அறிமுகம்

- இராஜா ராம்மோகன் ராய் 1833ஆம் ஆண்டு மறைந்தார்.
- அவர் விட்டுச் சென்ற சீர்திருத்தப் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டவர்:
    - மகரிஷி தேவேந்திரநாத் தாகூர்
- அவர்:
    - கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் தந்தை
    - பிரம்ம சமாஜத்தின் முக்கிய தலைவர்

---

#### 2. நம்பிக்கை பற்றிய நான்கு கொள்கைகள்

**1.முதல் கொள்கை**

- ஆரம்பத்தில் எதுவுமில்லை.
- எல்லாம் வல்ல ஒரே கடவுள் மட்டுமே இருந்தார்.
- அந்த கடவுள் தான் இந்த உலகத்தைப் படைத்தார்.

---

## 2.இரண்டாம் கொள்கை

- கடவுள்:
    - உண்மையின் கடவுள்
    - எல்லையற்ற ஞானத்தின் கடவுள்
    - நல்லொழுக்கத்தின் கடவுள்
    - சக்தியின் கடவுள்
- அவர்:
    - நிலையானவர்
    - எங்கும் நிறைந்திருப்பவர்
    - அவருக்கு ஒப்பானவர் யாரும் இல்லை

---

## 3.மூன்றாம் கொள்கை

- வீடுபேறு (மோட்சம்):
    - இந்தப் பிறவியிலும்
    - அடுத்த பிறவியிலும்
    - கடவுளை நம்புவதும் வணங்குவதும்மே சார்ந்துள்ளது

---

## 4.நான்காம் கொள்கை

- கடவுளை நம்புதல் என்பதன் அர்த்தம்:
    - கடவுளை நேசித்தல்

    - அவர் விரும்பிய செயல்களை நடைமுறைப்படுத்துதல்

## கேஷப் சந்திர சென் (1838–1884) & இந்தியாவின் பிரம்ம சமாஜம்

---

### 1. அறிமுகம்

- **தேவேந்திரநாத் தாகூர் மிதமான சீர்திருத்தவாதி.**
- **அவருடன் பணியாற்றிய இளம் சீர்திருத்தவாதிகள்:**
    - **வேகமான மாற்றங்களை விரும்பினர்.**
- **இவர்களில் மிக முக்கியமானவர் – கேஷப் சந்திர சென்.**

---

### 2. பிரம்ம சமாஜத்தில் சேருதல் – 1857

- **கேஷப் சந்திர சென் 1857ஆம் ஆண்டு பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தார்.**
- **அவர்:**
    - **தீவிர சீர்திருத்தவாதி**
    - **வேகமான சமூக மாற்றங்களை விரும்பியவர்**

---

### 3. பிரிவு – 1866

- **1866ஆம் ஆண்டு:**
    - **பிரம்ம சமாஜ உறுப்பினர்களிடையே பிளவு ஏற்பட்டது.**

- இதனால்:
    - கேஷப் சந்திர சென்
    - அவரது ஆதரவாளர்கள்
      பிரம்ம சமாஜத்திலிருந்து விலகினர்.

---

### 4. இந்தியாவின் பிரம்ம சமாஜம்

- கேஷப் சந்திர சென்:
    - புதிய அமைப்பாக
    - "இந்தியாவின் பிரம்ம சமாஜம்" உருவாக்கினார்.
- இதன் பின்னர்:
    - தேவேந்திரநாத் தாகூரின் அமைப்பு
    - "ஆதி பிரம்ம சமாஜம்" என அழைக்கப்பட்டது.

---

### 5. குழந்தைத் திருமணம் – சர்ச்சை

- பிரம்ம சமாஜம்:
    - குழந்தைத் திருமணத்தை கடுமையாக கண்டித்தது.
- ஆனால்:
    - கேஷப் சந்திர சென்
    - தனது 14 வயது மகளை
    - இந்திய இளவரசர் ஒருவருக்கு திருமணம் செய்து
      கொடுத்தார்.

---

### 6. சாதாரண சமாஜம் – புதிய பிரிவு

- இதனால்:
  - குழந்தைத் திருமணத்தை எதிர்த்தவர்கள்
  - இந்தியாவின் பிரம்ம சமாஜத்திலிருந்து விலகினர்.
- அவர்கள்:
  - "சாதாரண சமாஜம்" (**Sadharan Samaj**) என்ற
  - புதிய அமைப்பை நிறுவினர்.

## ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் – பெண்கள் & சமூக சீர்திருத்தவாதி

---

### 1. அறிமுகம்

- ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்:
  - வங்காளத்தைச் சேர்ந்த முக்கிய சமூக சீர்திருத்தவாதி
  - காலம்: **1820–1891**
- ராம்மோகன் ராய் போன்றோர்:
  - மேற்கத்திய பகுத்தறிவு சிந்தனைகளின் துணையுடன்
  - சமூக சீர்திருத்தம் செய்தனர்
- வித்யாசாகர்:
  - இந்து மறைநூல்கள் முற்போக்கானவை என்று வாதிட்டார்

---

## 2. இந்து மறைநூல்களின் விளக்கம்

- அவர் கூறியது:
    - விதவைகளை எரிப்பதும் (சதி)
    - விதவை மறுமணத்தைத் தடை செய்வதும்
    - இந்து மறைநூல்களில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை
- இதற்கான:
    - சான்றுகளை மறைநூல்களில் இருந்து முன்வைத்தார்
    - தனது கருத்துகளை ஆதரிக்கும் சிறு நூல்கள் வெளியிட்டார்

---

## 3. மொழி & இலக்கிய பங்களிப்பு

- அவர்:
    - நவீன வங்காள உரைநடையின் முன்னோடி
- எளிமையான நடை மூலம்:
    - கல்வியை மக்களிடம் எளிதாக கொண்டு சென்றார்

---

## 4. பெண்கல்வி & பள்ளிகள்

- பெண்கல்வியை மிக வலுவாக ஆதரித்தார்
- பெண்களுக்காக:
    - பல பள்ளிகள் நிறுவ உதவினார்

---

### 5. குழந்தை விதவைகளுக்கான சேவை

- **இந்து சமூகத்தில்:**
    - **சிறுவயதில் விதவைகளாகும் சிறுமிகளின் வாழ்க்கை**
    - **மிகக் கடினமாக இருந்தது**
- **அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக:**
    - **தன் முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்தார்**

---

### 6. விதவை மறுமணச் சட்டம் – 1856

- **வித்யாசாகர் தலைமையில் நடந்த போராட்டத்தின் விளைவாக:**
    - **1856ஆம் ஆண்டு விதவை மறுமணச் சட்டம் இயற்றப்பட்டது**
- **இந்தச் சட்டத்தின் நோக்கம்:**
    - **குழந்தை விதவைகளின் நிலையை மேம்படுத்துதல்**
    - **அவர்களை நிரந்தர விதவையாய் வாழ வேண்டிய ஆபத்திலிருந்து காப்பாற்றுதல்**

---

### (இ) கேசவ் சந்திர சென் மற்றும் இந்தியாவின் பிரம்ம சமாஜம்

- **தேவேந்திரநாத் தாகூர் ஒரு மிதமான சீர்திருத்தவாதி ஆவார்.**

- ஆனால் அவருடன் பணியாற்றிய இளையவர்கள் வேகமான சமூக மாற்றங்களை விரும்பினர்.
- இவர்களில் மிகவும் முக்கியமானவர் கேசவ் சந்திர சென் (1838–1884).
- அவர் 1857-ல் பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தார்.
- 1866-ல் பிரம்ம சமாஜத்தில் பிளவு ஏற்பட்டது.
- இதன் காரணமாக கேசவ் சந்திர சென், மிதவாதிகள் அமைப்பிலிருந்து விலகினார்.
- அவர் "இந்திய பிரம்ம சமாஜம்" என்ற புதிய அமைப்பை நிறுவினார்.
- இதற்குப் பிறகு தேவேந்திரநாத் தாகூரின் அமைப்பு "ஆதி பிரம்ம சமாஜம்" என்று அழைக்கப்பட்டது.
- பிரம்ம சமாஜம் குழந்தைத் திருமணத்தை கடுமையாக கண்டித்தது.
- ஆனால் கேசவ் சந்திர சென், தனது 14 வயது மகளை இந்திய இளவரசன் ஒருவருக்கு திருமணம் செய்து கொடுத்தார்.
- இதனால் குழந்தைத் திருமணத்திற்கு எதிராக இருந்தவர்கள், இந்திய பிரம்ம சமாஜத்திலிருந்து விலகினர்.
- அவர்கள் "சாதாரண சமாஜ் (சதாரண சமாஜ்)" என்ற புதிய அமைப்பை நிறுவினர்.

---

## (உ) பிரார்த்தனை சமாஜம்

- **மகாராஷ்டிரா பகுதி, சமூக சீர்திருத்த இயக்கங்களுக்கு மிகுந்த ஆதரவு அளித்தது.**
- **1867-ல் மும்பையில், பிரம்ம சமாஜத்தைப் பின்பற்றி பிரார்த்தனை சமாஜம் நிறுவப்பட்டது.**
- **இதை நிறுவியவர் ஆதாராம் பாண்டுரங் (1825–1898).**
- **இந்த சமாஜத்தின் முக்கிய உறுப்பினர்கள்:**
  - **R.C. பண்டர்கர்**
  - **நீதிபதி மகாதேவ் கோவிந்த் ரானடே**
- **இவர்கள் கீழ்கண்ட சீர்திருத்த நடவடிக்கைகளுக்காக தங்களை அர்ப்பணித்தனர்:**
  - **சாதி ஒழிப்பு**
  - **சமூக ஒற்றுமை**
  - **கலப்புத் திருமணம்**
  - **விதவை மறுமணம்**
  - **பெண்கள் முன்னேற்றம்**
  - **ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றம்**
- **மகாதேவ் கோவிந்த் ரானடே (1842–1901) நிறுவிய அமைப்புகள்:**
  - **விதவை மறுமண சங்கம் – 1861**
  - **புனே சர்வஜனிக் சபா – 1870**
  - **டெக்கான் கல்விக் கழகம் – 1884**

## இந்து புத்தெழுச்சி இயக்கம் – சுவாமி தயானந்த சரஸ்வதி மற்றும் ஆரிய சமாஜம் (1875)

- **பஞ்சாப் பகுதியில் சீர்திருத்த ஆரிய சமாஜ இயக்கங்கள் முக்கிய பங்கு வகித்தன.**
- **1875-ல் ஆரிய சமாஜம் நிறுவப்பட்டது.**
- **இதை நிறுவியவர் சுவாமி தயானந்த சரஸ்வதி (1824–1883).**
- **அவர் சன்னியாசியாக நாடு முழுவதும் சுற்றி திரிந்தார்.**
- **பின்னர் தனது கருத்துகளை பரப்புவதற்காக பஞ்சாபில் தங்கினார்.**
- **அவரது முக்கிய நூல் 'சத்தியார்த்த பிரகாஷ்'.**
- **இந்த நூல் பலரால் படிக்கப்பட்டது.**

---

## சுவாமி தயானந்தரின் சீர்திருத்தக் கருத்துகள்

- **கீழ்கண்ட பழக்கவழக்கங்களை வேத நூல்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அறிவித்தார்:**
  - **குழந்தைத் திருமணம்**
  - **விதவை மறுமணத்திற்கு எதிர்ப்பு**
  - **வெளிநாடு சென்றால் தீட்டு என்ற நம்பிக்கை**
- **அவர் முன்வைத்த முக்கிய கொள்கைகள்:**
  - **ஒரே கடவுள் வழிபாடு**
  - **உருவ வழிபாட்டை நிராகரித்தல்**

- ◦ பிராமணர்களின் சடங்கு ஆதிக்கத்தை எதிர்த்தல்
    - சமூக மூடநம்பிக்கைகள் மற்றும் பழக்கங்களை மறுத்தல்
- ஆரிய சமாஜம் இந்துமதத்தில் இருந்த மூடநம்பிக்கைகளை எதிர்த்தது.
- அதன் முழக்கம்: **"வேதங்களுக்கு திரும்புவோம்"**.

---

## மதமாற்ற எதிர்ப்பு மற்றும் சுத்தி இயக்கம்

- பிரிட்டிஷ் ஆட்சிக்கால இந்தியாவில் நடைபெற்ற மதமாற்ற நடவடிக்கைகளை நிறுத்த முயன்றது.
- ஆரிய சமாஜத்தின் முக்கிய குறிக்கோள்: **"எதிர் மதமாற்றம்"**.
- ஏற்கனவே இஸ்லாம் மற்றும் கிறித்தவ மதங்களுக்கு மாறிய இந்துக்களை,
    - மீண்டும் இந்துக்களாக மாற்ற **'சுத்தி (Suddhi)'** எனும் சுத்திகரிப்பு சடங்கை உருவாக்கியது.

---

## சமூக மற்றும் கல்விப் பணிகள்

- **ஆரிய சமாஜம்**:
    - சமூக சீர்திருத்தம்
    - கல்வி பரப்புதல்

    ஆகிய துறைகளில் முக்கிய சாதனைகள் புரிந்தது.
- பல **தயானந்த ஆங்கில-வேத பள்ளிகள் மற்றும் கல்லூரிகள்** நிறுவப்பட்டன.

-

### இராமகிருஷ்ண மிஷன் – உருவாக்கத்தின் பின்னணி

- **இராமகிருஷ்ணரின் முதன்மையான சாதனை:**
  - **பிரம்ம சமாஜம் போன்ற சீர்திருத்த அமைப்புகள் முன்வைத்த பகுத்தறிவு கருத்துகளால் அதிருப்தியடைந்த கல்வியறிவு பெற்ற இளைஞர்களை தன் பக்கம் ஈர்த்தது.**

---

### இராமகிருஷ்ணரின் மறைவுக்குப் பின் மேற்கொண்ட பணி

- **1886இல் இராமகிருஷ்ணர் இயற்கை எய்திய பின்,**
  - **அவருடைய சீடர்கள் தங்களை ஒரு மதம் சார்ந்த சமூகமாக அமைத்தனர்.**
- **அவர்கள்**:
  - **இராமகிருஷ்ணரையும் அவரின் போதனைகளையும் இந்தியாவிலும் உலகின் பல பகுதிகளிலும் பரப்பும் பெரும் பணியை மேற்கொண்டனர்.**

---

### சுவாமி விவேகானந்தர் மற்றும் மிஷன் நிறுவல்

- **இந்தப் பெரும் பணியின் பின்புலத்தில் இருந்த முக்கிய நபர் – சுவாமி விவேகானந்தர்.**

- **கிறித்தவ சமயப் பரப்பு நிறுவனங்களின் நிர்வாக கட்டமைப்பை பின்பற்றி,**
    - **சுவாமி விவேகானந்தர் இராமகிருஷ்ண மிஷனை நிறுவினார்.**

---

## இராமகிருஷ்ண மிஷனின் சமூகப் பணிகள்

- இராமகிருஷ்ண மிஷன்:
    - **மதச் செயல்பாடுகளோடு மட்டும் தன் பணியை நிறுத்திக் கொள்ளவில்லை.**
- சமூக சேவைகள்:
    - **மக்களுக்கு கல்வியறிவு வழங்குதல்**
    - **மருத்துவ உதவி அளித்தல்**
    - **இயற்கை சீற்றங்கள் ஏற்படும் போது நிவாரணப் பணிகள் மேற்கொள்ளுதல்**
- **இவ்வாறான செயலூக்கத்துடன் கூடிய சமூகப் பணிகளில் ஈடுபட்டது.**

## சுவாமி விவேகானந்தர்

**பின் காலத்தில் சுவாமி விவேகானந்தர் என அழைக்கப்பட்டவர்:**

**நரேந்திரநாத் தத்தா (1863–1902)**

- அவர்:
    - இராமகிருஷ்ண பரமஹம்சரின் முதன்மை சீடர்
- கல்வி கற்ற இளைஞராக இருந்த அவர்:
    - இராமகிருஷ்ணரின் கருத்துகளால் கவரப்பட்டார்

---

### தத்துவக் கருத்துகள் & சமூக நோக்கம்

- மரபுசார்ந்த தத்துவ நிலைப்பாடுகளில் மனநிறைவு பெறாதவர்
- அவர் முன்வைத்த நோக்கக்கருத்து:
    - மனிதகுலத்திற்குத் தொண்டு செய்வதே உயர்ந்த வழி
- மதம் தொடர்புடையதென்ற காரணத்திற்காக
    - எல்லா நிறுவனங்களையும் பாதுகாக்கும் மனப்பாங்கை கடுமையாக கண்டித்தார்

---

### பண்பாட்டு தேசியம் & இளைஞர் எழுச்சி

- பண்பாட்டு தேசியத்திற்கு முக்கியத்துவம் அளித்தார்
- இந்து சமூகத்திற்கு புத்துயிரளிக்க
    - இந்திய இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தார்
- அவரது சிந்தனைகள்:
    - தாழ்வு மனப்பான்மை கொண்டிருந்த இந்தியர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டின

---

## உலக மேடை – சிகாகோ மாநாடு, 1893

- **1893 – சிகாகோ உலக சமய மாநாடு**
- அங்கு:
    - இந்து சமயம்
    - பக்தி மார்க்க தத்துவம்
      பற்றி ஆற்றிய சொற்பொழிவுகள் பெரும் புகழ் பெற்றன

---

சமூக சமத்துவக் கருத்துகள்

- ஒடுக்கப்பட்ட மக்களும்
    - இந்து சமய சடங்குகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என்றார்
- சமூக சமத்துவத்தை வலியுறுத்தினார்

---

## அரசியல் எழுச்சியில் விவேகானந்தரின் தாக்கம்

- அவரது செயலாக்கமிக்க கருத்துகள்:
    - வங்காள இளைஞர்களிடையே அரசியல் மாற்றங்களுக்கான ஊக்கத்தை உருவாக்கின
- வங்கப் பிரிவினைக்குப் பின் நடைபெற்ற சுதேசி இயக்கத்தின் போது
    - பல இளைஞர்கள் விவேகானந்தரால் ஊக்கமடைந்தனர்

### பிரம்மஞான சபை – நிறுவல்

- **H.P. பிளாவட்ஸ்கி (1831–1891)**
  **மற்றும்**
  **கேர்னல் H.S. ஆல்காட் (1832–1907)**
  **ஆகியோரால்**
- **1875 ஆம் ஆண்டு அமெரிக்காவில்**
  **பிரம்மஞான சபை நிறுவப்பட்டது**
- **1886 ஆம் ஆண்டு**
  **இதன் தலைமையகம் இந்தியாவில் சென்னைக்கு**
  **அருகிலுள்ள அடையாருக்கு மாற்றப்பட்டது**

---

**வேத, இந்து இலக்கியப் பரப்புரை**

- **இந்து செவ்வியல் நூல்களை**
  **குறிப்பாக:**
  - **உபநிஷதங்கள்**
  - **பகவத்கீதை**
    **ஆகியவற்றைப் படிப்பதற்கு ஊக்கம் அளித்தது**

---

### பௌத்த புத்துயிர் இயக்கத்தில் பங்கு

- **இந்தியாவில் பௌத்த மதம் புத்துயிர் பெறுவதில்**
  **பிரம்மஞான சபை முக்கிய பங்கு வகித்தது**

---

### தேசிய பெருமை & பண்பாட்டு விழிப்புணர்வு

- **இந்து மறைநூல்களின் மீது மேற்கத்திய அறிஞர்கள் காட்டிய ஆர்வம்**
- **அதன் விளைவாக:**
    - **கல்வி பெற்ற இந்தியர்களிடையே**
    - **தங்களின் பாரம்பரியம் மற்றும் பண்பாடு குறித்த அளவிலாத பெருமை உருவானது**

### அன்னி பெசன்ட் – தலைமையாக்கம்

- **ஆல்காட்டின் மறைவுக்குப் பிறகு அன்னி பெசன்ட் (1847–1933) பிரம்மஞான சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்**
- **அவரது தலைமையில் இந்த இயக்கம் மேலும் செல்வாக்கு பெற்றது**

---

### தேசிய அரசியல் & தன்னாட்சி இயக்கம்

- **இந்திய தேசிய அரசியலில் முக்கிய பங்கு வகித்தார்**
- **தன்னாட்சி இயக்கச் சங்கத்தை நிறுவினார்**
- **அயர்லாந்துக்கு தன்னாட்சி வழங்கப்பட்டதைப் போல இந்தியாவிற்கும் தன்னாட்சி வேண்டும் என்று வலியுறுத்தினார்**

---

## பத்திரிகைகள் மூலம் கருத்துப் பரப்புரை

- **நியூ இந்தியா (New India)**
- **காமன்வீல் (Commonweal)**

**என்ற செய்தித்தாள்களின் மூலம்**

**பிரம்மஞான கருத்துகளை பரப்பினார்**

## (அ) ஜோதிராவ் கோவிந்தராவ் புலே

- **ஜோதிராவ் கோவிந்தராவ் புலே**
  - **பிறப்பு : 1827 – மகாராஷ்டிரா**
- **1852ஆம் ஆண்டு**
  - **ஒடுக்கப்பட்ட மக்களுக்கான முதல் பள்ளியை**
    - **பூனேவில் தொடங்கினார்**
- **சத்தியசோதக் சமாஜ் (Truth Seekers Society)**
  - **நிறுவிய நோக்கம்:**
    - **பிராமணரல்லாத மக்கள்**
    - **சுயமரியாதை, சுயசிந்தனை, சுயவாழ்வு**
    - **வாழ வேண்டும் என ஊக்குவித்தல்**

## ஜோதிராவ் புலே – சமூக சீர்திருத்தப் பணிகள்

- குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார்
- விதவை மறுமணத்தை ஆதரித்தார்
- மனைவி சாவித்திரிபாய் புலே உடன்
    - ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் பெண்களின் முன்னேற்றத்திற்காக
    - தம் வாழ்நாளை அர்ப்பணித்தார்

---

## ஜோதிராவ் புலே – சமூக சேவைகள் & நூல்

- அனாதை குழந்தைகளுக்காக விடுதிகள் நிறுவினார்
- விதவைகளுக்காக காப்பகங்கள் அமைத்தார்
- 'குலாம்கிரி' (அடிமைத்தனம்) என்ற நூல்
    - அவரது தீவிர சிந்தனைகளைச் சுருக்கமாக வெளிப்படுத்துகிறது

---

### (ஆ) நாராயண குரு

நாராயண குரு (1854–1928)

- பிறப்பு : கேரளா – ஏழை குடும்பம்

- மொழி அறிவு:
    - மலையாளம், சமஸ்கிருதம், தமிழ்
- பெரும் அறிஞர் மற்றும் கவிஞர்

---

## நாராயண குரு – சமூக சீர்திருத்தப் பணிகள்

- சாதிக் கொடுமைகள்
- ஒடுக்கப்பட்ட மக்களின் துன்பங்கள்

➡ இவற்றைக் கண்டு மனம் வருந்தி
➡ அவர்களின் முன்னேற்றத்திற்காக தன் முழு வாழ்வையும் அர்ப்பணித்தார்

---

## நாராயண குரு – அமைப்புகள் & கோவில்

- ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகத்தை நிறுவினார்
- அருவிபுரத்தில் பெரிய கோவிலை கட்டினார்
- அந்த கோவிலை அனைவர் பயன்பாட்டிற்கும் அர்ப்பணித்தார்

---

## நாராயண குரு – தாக்கம்

- குமரன் ஆசான், டாக்டர் பல்பு போன்ற
    - சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள்

➡ நாராயண குருவின் சிந்தனைகளால் தூண்டப்பட்டு
➡ இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றனர்

## (இ) அய்யன்காளி

- அய்யன்காளி
    - பிறப்பு : 1863 – திருவனந்தபுரம் அருகே செங்கனூர்
- அக்காலத்தில் அந்த பகுதி
    - திருவிதாங்கூர் அரசரின் ஆட்சிப் பகுதி

---

### அய்யன்காளி – சமூக சீர்திருத்தப் பாதை

- குழந்தைப் பருவத்திலேயே
    - சாதிப் பாகுபாட்டை அனுபவித்தார்
- அந்த அனுபவம் அவரை
    - சாதி எதிர்ப்பு இயக்கத்தின் தலைவராக மாற்றியது

---

### அய்யன்காளி – போராட்டங்கள்

அவர் அடிப்படை உரிமைகளுக்காக போராடினார்:

- பொது இடங்களில் செல்வதற்கான உரிமை
- பள்ளிகளில் கல்வி கற்க அனுமதி

---

### அய்யன்காளி – அமைப்பு நிறுவல்

- ஸ்ரீ நாராயண குருவால் ஊக்கம் பெற்றார்
- 1907 ஆம் ஆண்டு
    - சாது ஜன பரிபாலன சங்கம்
      *(Association for the Protection of the Poor)*

    - நிறுவினார்

- நோக்கம்:
    - ஏழை மக்களின் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றம்

## இஸ்லாமிய சீர்திருத்தங்கள் – பின்னணி

- 1857 பெரும்புரட்சி ஒடுக்கப்பட்ட பிறகு
    - இந்திய முஸ்லீம்கள் மேற்கத்திய பண்பாட்டை சந்தேகத்துடன் பார்த்தனர்
- மேற்கத்திய கல்வி, பண்பாடு, சிந்தனைகள்
    - இஸ்லாமிய மதத்திற்கு ஆபத்தாக இருக்குமோ என்ற அச்சம் ஏற்பட்டது
    -
- அதனால்
    - பெரும்பாலான முஸ்லீம்கள் மேற்கத்திய கல்வியை தவிர்த்தனர்
- ஆனால்
    - ஒரு சிறிய பிரிவினர் மட்டுமே மேற்கத்திய கல்வியை ஏற்றனர்

---

### சர் சயத் அகமத்கான்

- சர் சயத் அகமத்கான்
    - பிறப்பு : டெல்லி
    - உயர்குடி முஸ்லீம் குடும்பம்

- அவர் கருதியது:
    - கல்வியறிவு இல்லாமை தான் முஸ்லீம்களின் பின்னடைவுக்குக் காரணம்

---

### சர் சயத் அகமத்கான் – கல்வி சீர்திருத்தங்கள்

- முஸ்லீம்கள்:
    - மேற்கத்திய கல்வி பயில வேண்டும்
    - அறிவியல் கல்வி பெற வேண்டும்
    - பிரிட்டிஷ் அரசு பணிகளில் சேர வேண்டும்
- அறிவியல் கழகம் நிறுவினார்
- ஆங்கில அறிவியல் நூல்களை உருது மொழியில் மொழிபெயர்த்தார்

---

### சர் சயத் அகமத்கான் – அரசியல் நோக்கம்

- தேசிய இயக்கத்தில் இணைவதை விட
    - பிரிட்டிஷ் அரசுடன் நல்லுறவு வைத்தால்
    - முஸ்லீம்களின் நலன் பாதுகாக்கப்படும் என நம்பினார்
- எனவே
    - முஸ்லீம்கள் ஆங்கிலக் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்

---

## அலிகார் இயக்கம் – தொடக்கம்

- **1875 ஆம் ஆண்டு – அலிகார் நகரம்**
- **நிறுவியது:**
  - **அலிகார் முகம்மதிய ஆங்கில-ஓரியண்டல் கல்லூரி *(Aligarh Mohammedan Anglo-Oriental College)***
- **இதன் அடிப்படையில் உருவான இயக்கம்:**
  - **அலிகார் இயக்கம்**

---

## அலிகார் இயக்கம் – முக்கியத்துவம்

- **இந்திய முஸ்லீம்களின் கல்வி வரலாற்றில் முக்கிய மைல்கல்**
- **1920 ஆம் ஆண்டு**
  - **இக்கல்லூரி → பல்கலைக்கழகமாக உயர்த்தப்பட்டது**

---

## தியோபந்த் இயக்கம் – அறிமுகம்

- **தியோபந்த் இயக்கம் – ஒரு மீட்பியக்கம்**
- **நோக்கம்:**
  - **உண்மையான இஸ்லாமிய மதத்தையும் ஒழுக்கத்தையும் மீட்டெடுத்தல்**

---

## தியோபந்த் இயக்கம் – தொடக்கம்

- **1866 ஆம் ஆண்டு – சக்ரன்பூர் (உ.பி.)**

- நிறுவியவர்கள்:
    - முகமது காசிம் நாேனோத்தவி
    - ரஷீத் அகமத் கங்கோஹி
- நிறுவிய கல்வி நிறுவனம்:
    - தியோபந்த் பள்ளி

---

## தியோபந்த் பள்ளி – கல்வி நோக்கம்

- ஆங்கிலக் கல்வி மற்றும் மேற்கத்திய பண்பாடு புறக்கணிப்பு
- உண்மையான இஸ்லாமிய மதக் கல்வி கற்பித்தல்
- இஸ்லாமிய சமூகத்தின் ஒழுக்கம் & மதத்தை மீட்டெடுத்தல்

---

**தியோபந்த் இயக்கம் – அரசியல் சிந்தனை**

- தலைவர்: மௌலானா முகம்மது-உல்-ஹசன்
- அமைப்பு: ஜமியத்-உல்-உலமா
- முக்கிய கருத்துகள்:
    - இந்திய ஒற்றுமை
    - முஸ்லீம்களின் அரசியல் & மத உரிமைகள் பாதுகாப்பு

## பார்சி சீர்திருத்த இயக்கம்

- **19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில்**
  - **பார்சி சீர்திருத்த இயக்கம் பம்பாயில் தொடங்கப்பட்டது**

---

### இயக்கத்தின் தொடக்கம் – அமைப்பு நிறுவல்

- **1851 ஆம் ஆண்டு**
  - **தாதாபாய் நவ்ரோஜி**
  - **"ரஹ்னுமாய் மஸ்த்யாஸ்னி சபா"** ***(பார்சிகளின் சீர்திருத்தச் சங்கம்)*** **என்ற அமைப்பை நிறுவினார்**

---

### இயக்கத்தின் நோக்கம் & பத்திரிகை

- **இயக்கத்தின் நோக்கம்:**
  - **பார்சி சமூகத்தில் சீர்திருத்தம் ஏற்படுத்துதல்**
- **"ராஸ்ட் கோப்தார்"** (உண்மை விளம்பி)
  - **இயக்கத்தின் முக்கிய பத்திரிகையாக இருந்தது**

---

### குழந்தைத் திருமணத்திற்கு எதிரான போராட்டம்

- **சொராப்ஜி மல்பாரி**
  - **குழந்தைத் திருமணத்திற்கு எதிராக சட்டம் இயற்ற வேண்டும்**

    - **என இயக்கம் நடத்தினார்**

---

### பார்சி சமூகத் தலைவர்கள்

- **இந்த இயக்கம் உருவாக்கிய முக்கிய தலைவர்கள்:**
    - **பெரோசா மேத்தா**
    - **தீன்ஷா வாசா**
- **அவர்கள்**
    - **ஆரம்ப கால காங்கிரஸ் இயக்கத்தில் முக்கிய பங்கு வகித்தனர்**

---

### *சீக்கிய சீர்திருத்த இயக்கம்*

***(நிரங்காரிகள், நாம்தாரிகள்)***

#### *1. பஞ்சாப் சீக்கிய சமூகத்தில் சீர்திருத்த முயற்சிகள்*

- **பஞ்சாப் சீக்கிய சமூகத்தில் பல சீர்திருத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.**

---

#### 2. நிரங்காரி இயக்கம் (Nirankari Movement)

**நிறுவனர்:**

- **பாபா தயாள் தாஸ் நிரங்காரி**

**முக்கியக் கொள்கைகள்:**

- உருவமற்ற இறைவனை வழிபட வேண்டும் என்று வலியுறுத்தினார்.
- சிலை வழிபாட்டை மறுத்தார்.
- சிலை வழிபாட்டுடன் தொடர்புடைய சடங்குகளை எதிர்த்தார்.
- குரு கிரந்த் சாஹிபை மதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.
- மது அருந்துவதை கைவிட வேண்டும் என்று கூறினார்.
- மாமிசம் உண்ணுவதை கைவிட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

---

### 3. நாம்தாரி இயக்கம் (Namdhari Movement)

நிறுவனர்:

- பாபாராம் சிங் (ராம்சிங்)

இயக்கத்தின் தன்மை:

- இது சீக்கியர்களிடையே தோன்றிய மற்றொரு சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கம்.

முக்கியக் கொள்கைகள்:

- சீக்கிய அடையாளங்களில் கிர்பான் (வாள்) தவிர மற்ற அனைத்தையும் அணிய வற்புறுத்தியது.
- வாளுக்குப் பதிலாக, சீடர்கள் லத்தியை வைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.
- ஆண் – பெண் சமத்துவத்தை வலியுறுத்தியது.

- விதவை மறுமணத்தை ஆதரித்தது.
- வரதட்சணை முறையை தடை செய்தது.
- குழந்தை திருமணத்தை தடை செய்தது.

---

## 4. சிங் சபா இயக்கம் (Singh Sabha Movement)

தோற்ற சூழ்நிலை:

- ஆரிய சமாஜம் மற்றும் கிறித்தவ மதப் பரப்புரை நிறுவனங்களின் செல்வாக்கு அதிகரித்த காலத்தில், சிங் சபா இயக்கம் அமிர்தசரஸில் நிறுவப்பட்டது.

முக்கிய நோக்கம்:

- சீக்கிய மதத்தின் புனிதத்தையும் தூய்மையையும் மீட்டெடுப்பது இதன் முக்கியக் குறிக்கோள்.

கல்வி நடவடிக்கை:

- ஆங்கிலேயர்களின் ஆதரவுடன், அமிர்தசரஸில் சீக்கியர்களுக்கான கால்சா கல்லூரி நிறுவப்பட்டது.

வரலாற்று முக்கியத்துவம்:

- சிங் சபா இயக்கம், அகாலி இயக்கத்தின் முன்னோடியாக அமைந்தது.

## தமிழ்நாட்டின் சமூக சீர்திருத்தவாதிகள்

### (அ) இராமலிங்க சுவாமிகள் (வள்ளலார்)

**1. அறிமுகம்**

- இராமலிங்க சுவாமிகள், வள்ளலார் என்றும் அழைக்கப்படுகிறார்.
- பிரபலமாக அறியப்பட்ட பெயர்: இராமலிங்க அடிகள்
- காலம்: 1823 – 1874
- பிறந்த இடம்: சிதம்பரத்திற்கு அருகிலுள்ள மருதூர் கிராமம்

---

**2. குடும்பப் பின்னணி**

- தந்தையின் மறைவுக்குப் பிறகு, அவரது குடும்பம், சகோதரரின் சென்னையிலிருந்த இல்லத்திற்கு குடிபெயர்ந்தது.

---

**3. கல்வி மற்றும் அறிவுத் திறன்**

- முறையான கல்வியை பெறவில்லை.
- ஆனால், அற்புதமான புலமையை பெற்றிருந்தார்.

---

**4. மனிதநேயக் கொள்கைகள்**

- உயிர்களிடையே நம்பிக்கை மற்றும் இரக்கம் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

- "துயரப்படும் உயிரினங்களைப் பார்த்து இரக்கம் கொள்ளாதவர்கள் கல் நெஞ்சக்காரர்கள்;
  அவர்களின் ஞானம் மேகங்களால் மூடப்பட்டிருக்கும்"
  என்ற கருத்தை முன்வைத்தார்.
- தனது அன்பையும் இரக்கத்தையும், செடிகொடிகள் உட்பட அனைத்து உயிரினங்களிடமும் காட்டினார்.
- இதனை ஜீவகாருண்யம் என்று கூறினார்.

---

5. சமய மற்றும் சமூக இயக்கங்கள்

- 1865 ஆம் ஆண்டு:
  சமரச வேத சன்மார்க்க சங்கம் என்ற அமைப்பை நிறுவினார்.
- பின்னர், அது சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

---

6. பஞ்சகால சேவை

- 1866 ஆம் ஆண்டு தென்னிந்தியாவில் ஏற்பட்ட கடும் பஞ்சத்தை கருத்தில் கொண்டு,
  1867 ஆம் ஆண்டு:
  - சாதி எல்லைகளை தாண்டி, அனைத்து மக்களுக்கும் இலவச உணவு வழங்கும் நிலையத்தை,
  - வடலூரில் நிறுவினார்.

---

7. இலக்கியப் பங்களிப்பு

- அவர் இயற்றிய பல பாடல்கள்,
"திருவருட்பா" என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன.

## வள்ளலார் – சமூக அக்கறை மற்றும் மனிதநேயம்

**1. பசி மற்றும் வறுமை குறித்து வள்ளலாரின் வேதனை**

- நாட்டில் நிலவிய பசி மற்றும் வறுமையை வள்ளலார் நேரடியாகக் கண்டவர்.
- பசியால் இளைத்துப் போன,
மிகவும் சோர்வுற்ற ஏழை மக்களை,
ஒவ்வொரு வீட்டிற்கும் செல்வதை அவர் பார்த்தார்.
- இருந்தும், அவர்களின் பசி தீர்க்கப்படாததை நினைத்து, அவரது இதயம் மிகவும் வேதனைப்பட்டது.

---

**2. நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இரக்கம்**

- கடுமையான நோயால் வேதனைப்படுவோரைக் கண்டதும், அவரது இதயம் கலங்கியது.
- நோயால் வாடும் ஏழைகளைப் பார்த்து, ஆழ்ந்த இரக்கம் கொண்டார்.

---

**3. சமூக அவலங்கள் குறித்த மனவேதனை**

- ஏழைகளாகவும், ஆதரவற்றவர்களாகவும், நற்பண்புகள் இன்றியவர்களாகவும்,

கடும் மனவேதனையில் வாழும் மக்களைப் பார்த்தபோது, வள்ளலார் மிகுந்த வேதனை அடைந்தார்.

---

**4. வள்ளலாரின் உள்ளுணர்வு**

- மக்களின் துயரங்களைப் பார்த்து, தன் மனம் உடைந்து பலவீனமடைந்ததாக அவர் கூறினார்.
- இது, அவரின் ஆழ்ந்த மனிதநேயத்தையும், சமூக அக்கறையையும் வெளிப்படுத்துகிறது.

## அயோத்தி தாசர் – சமூக நீதி போராளி

### 1. அறிமுகம்

- பண்டிதர் அயோத்தி தாசர் (1845 – 1914)
- தீவிர தமிழ் அறிஞர், சித்த மருத்துவ அறிஞர், பத்திரிகையாளர், சமூக அரசியல் செயற்பாட்டாளர்
- சென்னையில் பிறந்தவர்
- தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பாலி மொழிகளில் புலமை பெற்றவர்
- திறமையான பேச்சாளர்

---

### 2. சமூக நீதி மற்றும் சாதி ஒழிப்பு பணி

- சமூகநீதிக்காக இயக்கங்கள் நடத்தினார்

- சாதி ஒடுக்குமுறையிலிருந்து ஒடுக்கப்பட்ட மக்களை விடுவிக்க பாடுபட்டார்
- சாதியற்ற அடையாளத்தை உருவாக்க முயன்றார்
- சாதி மேலாதிக்கம் மற்றும் தீண்டாமைக்கு எதிராக கடும் எதிர்ப்பு தெரிவித்தார்

---

### 3. கல்வி மேம்பாடு

- கல்வியை விடுதலைக்கான கருவியாக கருதினார்
- தமிழ்நாட்டில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பல பள்ளிகள் உருவாவதற்கு உந்துசக்தியாக இருந்தார்

---

### 4. அமைப்புகள் மற்றும் இயக்கங்கள்

- ஒடுக்கப்பட்டோரின் கோவில் நுழைவுக்கு ஆதரவாக
    - அத்வைதானந்தா சபா நிறுவினார்
- **1882 – "திராவிடர் கழகம்" (ஜான் ரத்தினத்துடன்)**
- **1885 – "திராவிட பாண்டியன்" இதழ் தொடக்கம்**
- **1891 – "திராவிட மகாஜன சபா" நிறுவல்**
    - முதல் மாநாடு – நீலகிரி

---

### 5. புத்த சமய இயக்கம்

- **1898 – இலங்கை பயணம்**
- பௌத்த மதத்தை ஏற்றுக்கொண்டார்

- **பகுத்தறிவின் அடிப்படையில் சமய தத்துவத்தை உருவாக்க**
    - **“சாக்கிய பௌத்த சங்கம்” – சென்னை**

---

### 6. பத்திரிகை பணி

- **1907 – “ஒரு பௌத்த தமிழன்” என்ற வார இதழ் தொடக்கம்**
- **1914 (மரணம் வரை) தொடர்ந்து வெளியிட்டார்**